பரி.பவுல் ஆலயம், குவைத்.

# அஹமதி தமிழ் திருச்சபை

# 47வது ஆண்டு விழா

ஆண்டு விழா வாக்குத்தத்தம்

## அவரே (இயேசுவே) கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்.

சகரியா 6:13

ATC TAMIL

Follow us on

www.ahmaditamilchurch.com

# கடந்த வருட நிகழ்வுகள் ஒரு சில உங்கள் பார்வைக்கு





















# சபை ஊழியரின் அன்பு மடல்



## " அவரே (இயேசுவே) கர்த்தருடைய ஆலயத்ததைக் கட்டுவார் "

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் சபையின் 47–வது ஆண்டு விழா மற்றும் சிறுவர் வேதாகமப் பள்ளியின் 21–வது ஆண்டு விழா நல்வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் கூறிக்கொள்ளுகிறேன்.

இந்த வருட ஆண்டு விழா வாக்குத்தத்தம்.

"அவரே (இயேசுவே) கர்த்தருடைய ஆலயத்ததைக் கட்டுவார்" (சகரி–6:13)

" It is He (Jesus) who will Build the temple of the Lord" (zac-6:13)

### 1. கிளை என்பவர் கட்டுவார்...

சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் இதோ ஒரு புருஷன் அவருடைய நாமம் "கிளை என்னப்படும், அவர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து முளைத்தெழும்பி கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்" (சகரி 6:12) கிளை என்று குறிப்பிடுவது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத்தான். அவரே சபையைக் கட்டுகிறவர். "இரட்சிக்கப்படுகிற ஜனங்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" (அப்–2:47) இயேசுவே சபைகளைக் கட்டுகிறவர்.

ஒரு சபையின் அஸ்திபாரம் இயேசு கிறிஸ்துவே அவரே கண்மலை அவர் சிந்தின பரிசுத்த இரத்தத்தின் மேல் தான் சபை கட்டப்பட்டிருக்கிறது. நம்முடைய சபையின் அஸ்திபாரமும் இயேசு கிறிஸ்துதான். அவரே ஆத்துமாக்களை அனுதினமும் நம்முடைய சபைக்கு அழைத்து வருவார். "ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பி செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும் ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல் தங்கியிருப்பார்.

கர்த்தருக்கு பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும் அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும் தமது காது கேட்டபடி தீர்ப்பு செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்கு தீர்ப்பு செய்து பூமியை தமது வாக்கின் கோலால் அடித்து தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரை சங்கரிப்பார். நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்" (ஏசா–11:1–6) மேற்சொன்ன அனைத்து ஆசீர்வாதங்களையும், வல்லமைகளையும் கிருபைகளையும் கர்த்தர் நம் சபைக்கு கொடுப்பார்.

### 2. ராஜாவாக இருந்துக் கட்டுவார்...

அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார் அவர் மகிமை பொருந்தினரவாய் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார். (சகரி–6:13)

ஆம் பிரியமானவர்களே. இயேசுவே ராஜாதி ராஜாவாக சபைக்குத் தலையாக வீற்றிருந்து நீதியோடும், நியாயத்தோடும் சபையை நடத்துவார். "தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்ஜியத்தையும் அவர் திடப்படுத்தி அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை. சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதை செய்யும்" (ஏசா–9:7)

"நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம். கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்" (சங்கீ–89:14) என்று தாவீது பாடினார். "நமக்கு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்" (ஏசா–9:6)

ஆம் பிரியமானவர்களே, அக்கிரமங்களுக்கும், அநியாயங்களுக்கும், பிசாசின் அதிகாரங்களுக்கும் சபையில் இடமில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சகல அதிகாரத்தோடும் சபையில் நீதியையும் நியாயத்தையும் நிலைப்படுத்துவார். உண்மையான தேவ நீதி நமக்கு கிடைக்கும். கர்த்தருடைய மகத்துவம் எவ்வளவு பெரியது பாருங்கள். அல்லேலூயா.

### 3. ஆசாரியராக இருந்து கட்டுவார்...

"அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார். தம்முடைய சிங்காசனத்தின் மேல் ஆசாரியராயும் இருப்பார்... தூரத்திலுள்ளவர்கள் வந்து கர்த்தருடைய ஆலயத்தை கூட இருந்து

கட்டுவார்கள்.... உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தை கேட்டு நடந்தீர்களானால் இது நிறைவேறும்" (சகரி-6:13,15)

ஆம் பிரியமானவர்களே அவர் தம்முடைய பரிசுத்த இரத்தத்தை நமக்காக சிந்தி நம்மை மீட்டெடுத்து சபையை நிலைப்படுத்தி அநேக ஆத்துமாக்களை கொள்ளை பொருளாய் சம்பாதித்து தம்முடைய தூய இரத்தத்தின் கிரயத்தினால் எல்லா மக்களையும் ஜாதி, இன, மொழி, நிற பேதமின்றி பரிசுத்த ஜாதியாய் உருமாற்றி உன்னத ஆசாரியராய் என்றென்றைக்கும் வீற்றிருக்கிறார். அந்த அன்பரின் சத்தத்தை கேட்டு அவருடைய கற்பனைகளுக்கு கீழ்படிந்து நடப்போமென்றால் கர்த்தர் நம்மையும் விலையேறப்பெற்ற கனி தரும் மரங்களாய் எடுத்து பயன்படுத்துவார்.

"நீங்களோ? உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

தன்னுடைய இரத்தத்தை சிந்தி மனுக்குலத்தை மீட்டெடுத்த உத்தம ஆசாரியர் இயேசு கிறிஸ்து. நமக்கும் அந்த ஆசாரிய அதிகாரத்தை அளிக்கிறார். இந்த உலகத்தில் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்ந்து மரணத்திற்கு பிறகு நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொண்டு பரம சபையிலே அவருடைய சிங்காசனத்தில் அவரோடு அமர்ந்து ஆளுகை செய்கிற கிருபையை ஆண்டவர் நமக்குத் தருகிறார்.

மேற் சொன்ன ஆசீர்வாதங்களை நாமும் நம் சபையும் பெற்று 48-வது ஆண்டுக்குள் பிரவேசிக்க நம் ஆண்டவர் அருள் புரிவாராக.

கர்த்தருடைய கிருபை உங்கள் ஒவ்வொருவரோடும் தங்கியிருந்து உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்,
S.ஸ்டாலின்

## பல ஆண்டுகளை கடந்தும்...



47 ஆண்டுகள் மட்டுமல்ல
பல நூற்றுக்கும் மேலேயும் கடந்து
வாழவிருக்கும் எனதருமை
அகமதி தமிழ் திருச்சபையே...

என்றென்றும் நீதான் என் தாயும் தந்தையுமானீர்
உனதருமை சொல்லி முடியாது
உன் சாட்சிகள் அதிகம்
உன் அற்புதம் மிக அதிகம்

உன் வரலாறு என்றென்றைக்கும் அழியாது
ஆத்துமாக்களை அதிகம் பெற்று
அன்புடன் நடத்தி
அறிவைப் புகட்டினாய்

அன்னம் அளித்து பலரை போஷித்து
இயேசுவை அறிமுகப்படுத்திய
அழகான மணவாட்டி நீ...

உம்மைத் தவிர யாரை வாழ்த்த
பிதாவைத் தவிர யாரை கனம் பண்ண
இயேசுவைத் தவிர யாரை வணங்க
பரிசுத்த ஆவியினால் நிரம்ப
வாஞ்சிக்கும் அடிமை நான்

நீ பல காலம் வாழ்ந்து வளர
இதயப்பூர்வமுடன்
வாழ்த்தி வணங்குகிறேன்.

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்,
S. சுகுமாரன்.

## சபையின் பொருளாளர்

47-ஆம் விழாவை கொண்டாடுகின்ற எம் சபையே சீக்கிரத்தில் கிளை சபைகளால் அலங்கரிக்கப்படவும், இன்னம் அதிகமாக வளர்ந்து பெருகவும் அதற்காக ஆத்தும அறுவடை பணியில் ஆர்வத்துடன் உழைத்திடவும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

நாற்பத்தி ஏழு ஆண்டு திருச்சபை வரலாற்றில் பல்வேறு கால கட்டங்களில் சபை ஊழியர்களாக ஊழியம் செய்த ஒவ்வொருவருடைய நல்ல சேவைகளை நினைத்து கர்த்தரை துதிக்கிறேன். சபையின் அங்கத்தினர்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் 47 –ஆவது சபை ஆண்டு விழா வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

கர்த்தர் தாமே அஹமதி தமிழ் திருச்சபை மென்மேலும் வளர்ந்து பெருகிட அனைத்து கிருபைகளையும் தந்து ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு,
S.சிவக்குமார் மற்றும் குடும்பத்தார்

## சகோதரிகள் ஐக்கிய குழு பொறுப்பாளர்



இந்த அந்நிய தேசத்தில்
குறையில்லா சுகங்களை
அள்ளிக்கொடுக்கும் எங்கள்
இயேசு ராஜாவே!

பாலைவனமாக இருந்தாலும்
உன் ஆலயத்தில் நுழையும்போது
சோலைவனம் ஆகிறது
எங்கள் உள்ளம் ஆயிரம் துன்பத்துடன்
ஆயிரம் பாவத்துடன்
உன்னிடம் அடைக்கலம் ஆனவர்க்கு
அடைக்கலம் தந்தவரே!

எங்கள் கண்ணீர் யாவையும்
துடைக்கும் தூயவனே
தூயவரின் பால் வந்தவரே
இந்தப் பாவிகளை இரட்சிக்கும் வித்தகரே
அன்று உன் நற்செய்தி மூலம்
இறையாட்சி சொன்னாய்
இன்று மக்களாட்சியில் மலர்ந்திருக்கிறோம்

ஆண்டவரே நீ முப்பது வயதில்
திருமுழுக்கு பெற்றாய்
எங்கள் பாவங்கள் போக்க
நீ பரலோகத்தில் மட்டுமல்ல
இந்த பாலைவனத்திலும் இருக்கிறாய்

எங்கள் பாவங்களை போக்க வந்த
பாலைவனப் பிதாவே
நீ உவமைகள் மூலம் பேசினாய்
புதுமைகள் பூசினாய்
அற்புதங்களை அள்ளி வீசினாய்
பிழைப்புத் தேடி வந்தவர்க்கு
உழைக்கும் இடம் காட்டிய
உத்தமர் நீர், நல்லவர் நீர்
வேலை இழந்து வந்தவர்க்கு
வழி காட்டிய நல்லவரே
குழந்தைச் செல்வம் வேண்டி வந்தவர்க்கு
குழந்தைச் செல்வத்தை தந்தவரே

எங்கள் கண்ணீரை
உம் பாதத்தில் வைக்கும்போது
எங்களை தூய்மைப்படுத்தினாய்
எங்கள் பாவங்களை
உன் மீது இறக்கும்போது
எங்களை பரிசுத்தப்படுத்துகிறாய்
உன் இல்லமும் எங்கள் உள்ளமும்
சங்கமித்து நாற்பத்தி ஏழு ஆண்டுகள் முடிகிறது
ஆனாலும் நீ எங்களின்
முடிசூடா மன்னவராய் திகழ்கின்றாய்
அகமதி திருச்சபையே நீ வாழ்க பல்லாண்டு பல ஆண்டு
உன்னை வாழ்த்த எனக்கு வயதில்லை.

இப்படிக்கு,
கர்த்தரின் பணியில்
சகோதரி.செலின் டேவிட் குடும்பத்தார்

## சபை வாலிபர்கள் குழு பொறுப்பாளர்



**பிறந்த நாள் வாழ்த்து**

உலக மொழிகளில் அதிகம்
மொழி மாற்றம் செய்யப்பட்ட
புத்தகத்தை கொண்ட
உலக மொழியாம் எங்கள் தாய்மொழி
தமிழ்மொழியில் உனக்கோர் பிறந்த நாள் வாழ்த்து

எங்கள் ஆண்டவரை ஆராதிக்க வாய்ப்பு தந்த
அஹமதி தமிழ் திருச்சபையே
உனக்கோர் பிறந்த நாள் வாழ்த்து

கடல் தாண்டிகண்டம் தாண்டி பிழைப்பை தேடி வந்த
எங்களுக்கு உறவுகளைத் தந்த
உனக்கோர் பிறந்தநாள் வாழ்த்து

கலங்கிய மனதோடு
நிரம்பிய கண்ணீரோடு
உன் நிழலில் ஜெபித்த ஜெபங்களுக்கு
பதில் கிடைக்க செய்த
உனக்கோர் பிறந்தநாள் வாழ்த்து

காலங்கள் மாறியும் காட்சிகள் மாறியும்
மாறாமல் நீடித்து நிற்கம் உன் புகழுக்கோர்
பிறந்த நாள் வாழ்த்து
உண்மை தேவனை அறியாமல்
பெயர்கிறிஸ்தவனாய் அலைந்த
அநேகரை சிலுவை அன்பில் நடத்திய
உனக்கோர் பிறந்தநாள் வாழ்த்து

தகுதியில்லாதவரையும் பேதைகளையும்
ஊழியக்காரனாய் மாற்றி அழகு பார்த்த
உனக்கோர் பிறந்த நாள் வாழ்த்து
கடன்காரனாய் உன்னண்டையில் வந்த எங்களை
செல்வ கோமான்களாக்கி அழகு பார்த்த
உனக்கோர் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இந்த அரேபிய தேசத்தில் அநாதையாய் வந்த
எங்களுக்கு தாய் சபையாகி உன் பிள்ளையாய்
உன்னிடத்தில் வந்து உயிருள்ள ஆண்டவரை
துதிக்க ஆராதிக்க ஆதரித்த
உனக்கு பிறந்தநாள் வாழ்த்து

நீ நீடூழி வாழ்ந்து எங்களைப் போல் வருவோரை
ஆதரித்து வழிநடத்துமாறு
இந்த 47–ஆம் ஆண்டு உன் பிறந்தநாள் தினத்திலே
உன்னை வாழ்த்தும் உள்ளங்களில் நானும்
ஒருவனானதால் பெருமிதம் கொள்கிறேன்

வாழ்க உன் புகழ் ஓங்குக உன் கீதம்
இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்
எம் அஹமதி திருச்சபையே

இப்படிக்கு,
கர்த்தரின் பணியில்
சுபின் சிங் மற்றும் குடும்பத்தார்

## சகோதரிகள் பகுதி

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இந்த செய்தி மலர் வழியாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவராக.

### யார் இந்த எப்சிபா?

வேதத்தில் ஏசாயா 62:3 முதல் 5 வசனம் வரை கவனித்தோமானால் இந்த பெண்ணின் பெயர் இருக்கிறது. அதில் குறிப்பிட்டு ஏசாயா–62:4–ம் வசனத்தில் நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமலும், உன் தேசம் இனிப் பாழான தேசமென்னப்படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும். கர்த்தர் உன் மேல் பிரியமாயிருக்கிறார். உன் தேசம் வாழ்க்கைப்படும்.

ஆம் பிரியமானவர்களே, இப்பொழுதும் யாரை குறித்து பார்க்க போகிறோம் என்றால் எப்சிபா (அல்லது) எப்சிபாள். இந்த பெண்மணியை குறித்து வேதத்தில் அதி–கமாக குறிப்பிடப்படவில்லை. ஆனால் அவர்களுடைய பெயரானது வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2–இராஜாக்கள்: 20 அதிகாரம்–21–ம் வசனத்தை நாம் கவனித்தோமானால் எசேக்கியா ராஜா மரணம் அடைகிறதும், அவர் மரணமடைந்த பிறகு அவருடைய மகன் மனாசே–12 வயதான அவர் ராஜபாரத்தை எடுத்து கொண்டு 55 வருடங்கள் எருசலேமை ஆட்சி செய்கிறதை நாம் பார்க்கிறோம்.

2–இராஜாக்கள்–21–1–ம் வசனம் இந்த மனா–சேயினுடைய தாயின் பெயர் எப்சிபாள் என்று பார்க்கிறோம். இங்கு நாம் மூன்று கதாபாத்திரங்களை பார்க்கிறோம். ஒன்று எசேக்கியா ராஜா தேவனுக்கு பயந்த ஒரு மனுஷன், நல்ல ஒரு ராஜா, ஆண்டவருக்கு பிரியமுள்ள காரியத்தை செய்கிற ராஜா, இந்த ராஜாவுக்கு பிறந்த மகன் தான் மனாசே. இந்த மனாசே ரொம்ப கொடூரமான கெட்ட ராஜா என்று சொல்லலாம். ஆண்டவருக்கு பிரியமில்லாத காரியங்களை

துணிகரமாய் செய்த ஒரு ராஜா என்று நாம் பார்க்கிறோம். இந்த எசேக்கியா ராஜாவின் மனைவி பெயர் தான் எப்சிபாள் என்று பார்க்கிறோம். ஒரு ஸ்தீரிக்கு நல்ல தேவ பக்தியுள்ள ஒரு கணவர் அமைகிறார், அதே ஸ்தீரிக்கு தேவ பக்தியற்ற ஒரு மகனும் அமைகிறார். இந்த இரண்டிற்கும் நடுவில் இந்த ஸ்தீரி வாழ்கின்றதை நாம் பார்க்கிறோம்.

அந்நாட்களில் அநேக யுத்த செய்திகளும், அநேக காரியங்களும் தேவ ஜனங்களுக்கு விரோதமாய் அவர்கள் பார்த்திருப்பார்கள். அப்பொழுது அவர்களுடைய மனநிலை நிச்சயமாக கவலையாகவோ, சோர்வாகவோ இருந்திருக்க வாய்ப்பு இருக்கும். அந்த நேரத்தில் ஆண்டவர் அவர்களை எப்படி அழைக்கிறார். அவர் தன்னுடைய ஜனங்களோடு பேசும் போது இந்த பெண்மணியை சுட்டி காட்டி ஏசாயா–62–4–ல் நீ எப்சிபா என்றும் உன் தேசம் பியூலா என்றம் சொல்லப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் ஒரு காரியம் தெளிவுப்படுகிறது. இவர் பெயரின் அர்த்தம் என்ன? In English எப்சிபா " The Lords delight" என்றும் தமிழில் "கர்த்தரின் பிரியம்" கர்த்தருக்கு பிரியமானவள் என்று நாம் சொல்லலாம்.

கர்த்தருக்கு பிரியமானவள் "Lord's delight"ஆக இருக்க வேண்டுமென்றால் அவர்கள் இருந்த கால கட்டம் கஷ்டமான இக்கட்டான கொடூரமான சூழ்நிலையில் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அந்த நேரத்திலும் கர்த்தருடைய பார்வைக்கு இவள் ஒரு பிரியமுள்ள காரியாகவும் கர்த்தரின் பிரியமாகவும் "Lord's delight"ஆக இவங்க இருக்கிறதற்கு என்ன ஒரு காரணம் என்று பார்ப்போம். நாம் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பெயர் இருக்கலாம் ஆனாலும் இந்த "எப்சிபாள்" கர்த்தரின் பிரியமாய் இருந்தது போல நாமும் அவருக்கு பிரியமாய் வாழ கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

1–சாமுவேல்–15–22 அப்பொழுது ஆண்டவருக்கு செவி கொடுப்பதை பார்க்கிலும் மற்ற காரியங்கள், நாம் கொடுக்கிற காணிக்கை களிலும் பலிகளிலும் கர்த்தர் பிரியமாயிருப்பதில்லை. அவர் கீழ்படிதலில் தான் பிரியம் அதிகம் வைக்கிறார். சங்கீ–147–11– தமக்கு பயந்து தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

ஆண்டவர் யார் மேல் பிரியமாயிருக்கிறார் உள்ளத்தில் உண்மையாய் இருக்கிறவர்களுக்கு ஆண்டவருக்கு கீழ்படிகிறவர்களுக்கு தமக்கு பயந்து அவர் கிருபைக்கு காத்திருக்கிறவர்களுக்கு கர்த்தர் பிரியமாய் இருக்கிறார். நீதி–11:1– வசனம் கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது, சுமுத்திரையான நிறைக்கல்லோ கர்த்தருக்கு பிரியம்.

நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் நமக்குள் அப்படிப்பட்ட கள்ளத்தராசு நமக்குள் இருக்கிறதா? அல்லது சரியான (Accurate weight) நமக்குள் இருக்கிறதா? ஆண்டவர் அப்படிப்பட்ட காரியத்தில் பிரியமாய் இருக்கிறார்.

எப்சிபா (எப்சிபாள்) என்ற இந்த ஸ்தீரியின் பெயர் சுட்டிக்காட்டுகின்ற அருமையான பாடம் கர்த்தரின் பிரியம் (Lord's delight) நீங்களும் நானும் கர்த்தருக்கு

பிரியமான பிள்ளைகளாக அழைக்கப்பட வேண்டுமென்றால் இந்த வசனங்களில் சொன்ன வார்த்தைகளையும் ஒவ்வொரு காரியத்தையும் நாம் தியானிப்போம். நம்முடைய வாழ்க்கை கூட இந்த எப்சிபாவை போல கொடூரமாக கஷ்டமாக இக்கட்டான சூழ்நிலையில் இருக்கலாம். நம்மைப் பார்த்து தான் கர்த்தர் சொல்கிறார். "நான் உன் மேல் பிரியமாய் இருக்கிறேன்" நீ எனக்கு பிரியமானவள்(ன்) என்று...

கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக.... இந்த 47–வது ஆண்டு விழாவை காண்கின்ற நம் "அஹமதி தமிழ் திருச்சபை"யை பார்த்து கர்த்தர் சொல்கிறார். நான் உன் மேல் பிரியமாயிருக்கிறேன் என்று... நம் சபையின் குடும்பங்களை பிள்ளைகளை ஊழியர்களை, ஊழியப்பொருப்பாளர்கள் யாவரையும் பார்த்து சொல்கிறார் நீ எனக்கு மிகவும் பிரியமானவள், பிரியமானவன் என்று, இன்று போல பல நூற்றாண்டுகளை கண்டு பிரியமான திருச்சபையாக, மணவாட்டியாக கோடா கோடி ஆத்துமாக்கள் வந்து நம் சபையில் ஆசீர்வதிக்கப்பட வாழ்த்துகிறோம்.

சபையே...தலை வணங்குகின்றோம் உம்மை பார்த்து.... ஆமென்.

கர்த்தருக்கு பிரியமான,

எப்சிபா ஸ்டீபன்

## அகவை

அகவை 47-ஐ கடந்த எங்கள்அஹமதி தமிழ்
திருச்சபையே உன்..
ஆழிமைக்குள் நாங்களும் ஒரு வண்ணத்துப் பூச்சிகளாய்
பறக்கின்றோம்...
இனிமையான தேனைப் போல் வசனங்களால் எங்களை
நிறைக்கின்றாய்...
ஈசனாம் எங்கள் தேவாதி தேவனை...
உறுதியாய் பற்றிக்கொள்ள ஒரு...
ஊன்றுபோலாய் அமைந்த எங்கள் தாய் நீ என்றும்
உன் சன்னதியை நாங்கள் ஏக்காய் நாடி வர...
ஐக்கியமாய் ஒன்று கூட...
ஒப்பற்ற சிகரமாய் இருப்பவள் நீ எங்கள்
அஹமதி திருச்சபை...
ஓங்கி வளரும் எங்கள் வாழ்க்கைக்கு...
ஔஷதமாய் இருப்பவள் நீ எங்கள் அஹமதி சபை...
ஃஅதே இனிவரும் சந்ததி பலருக்கும் ஒளி தரும்
மின்னலாய்! உதவிக்கரமாய்
பாலைவன தேசத்தில் ஒரு சோலைவனமாய் நீ இருக்க
வேண்டும் என்று உன்னை
வாழ்க! வளர்க! என வாழ்த்துகிறேன்...

இப்படிக்கு,
சகோ. ஆரோக்கியராஜ்
குடும்பத்தினர்.

## அழகிய தோட்டம்

குவைத் என்னும் அழகிய பூங்காவில்
ஆலமரம் என்னும் சபையில் நிழலில்
வண்ண பூக்களாய் பூத்திருக்கும்
அன்பு அஹமதி திருச்சபையின்
ஒலிவ மர கன்றுகளான சகோதரர்களே
லீலி பூக்களான சகோதரிகளே
மொட்டுகளான பிள்ளைகளே
உங்களுடன் பங்கு பெற்று
அபிஷேகம் எனும் எண்ணையையும்
சத்தியம் என்னும் நீரையும்
தேவனுடைய வார்த்தயைால் வெளிபடுத்த
அன்போடு அனைவருக்கும் நன்றி
என்று மனம் வீச
இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்
நானும் வாழ்த்துகிறேன்
மன நிறைவோடு
அஹமதி தமிழ் திருச்சபையை !!!

இப்படிக்கு,
சகோ. ஆன்டனி,விஜயா
குடும்பத்தினர்.

## கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள அன்பின் அகமதி தமழ்த்திருச்சபையோருக்கு

கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் 47-ம் ஆண்டு விழாவை அனுசரிக்கிற யாவரையும் இரட்சகர் இயேசுவ-ன் நாமத்தில் வாழ்த்துகிறோம்.
இத்தனை வருடங்கள் சபையை நடத்தி வந்த தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆச்சரியமாய் அதிசயமாய் கிருபையாய் நடத்தினதற்காய் நன்றி செலுத்துகிறோம்.

இங்கு அவர் உருவாக்கிய விசுவாசிகளுட்காய், ஊழியர்களுட்காய், சபையை நடத்த பயன்படுத்திய பாத்திரங்களுட்காய் அவருக்கு ஸ்தோத்திரம். இது வரையும் இங்கு வைக்கப்பட்ட ஜெபங்களும். இந்த ஆலயத்தில் வந்த ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்தவர்

இந்த புது வருடத்திலும் 2-நாளாகமம் 7:15,16-ன் படி "இந்த ஸ்லத்தில் செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும் என் நாமம் இந்த ஆலயத்தில் என்றென்றைக்கும் இருக்கும்படி, நான் இதைத் தெரிந்துகொண்டு பரிசுத்தப்படுத்தினேன். என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் இங்கே இருக்கும்.
என்ற ஆண்டவரின் வார்த்தையின்படி வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.

கர்த்தரின் பணியில்,
R.Ravichandran, Grace &
karunya Ravichandran.

## அகிலம் படைத்து அன்பை கொடுத்தவர்

47-ஆம் ஆண்டு நிறைவை காண வந்த எங்கள் அகமதி தமிழ் திருச்சபையே!

புத்தம் புதிதாய் பூத்த கதிரவன் அல்ல நீர், ஒரு வரி புதுக்கவிதையும் அல்ல நீர் உம் வார்த்தையால் அகிலம் படைத்து உம் திருவசனத்தால் அறிவை விதைத்து விண்ணின் ஒளியாய் மண்ணின் மைந்தனாய் எங்களுக்கு அன்பைக் காட்டி கண்ணின் கருவிழியாய் அகமதி தமிழ் திருச்சபையை பாதுகாத்து, நீர் உரைத்த வார்த்தைகள் எங்களுக்கு பாதையாகவும், வெளிச்சமாகவும் அதுவே எங்கள் வாழ்க்கையாக மாறட்டும்.

சமாதானத்தின் ஊற்றாய் ஆசீர்வதிப்பதில் அமுத சுரபியாய் அன்பு காட்டுவதில் அன்னையாய் ஆதரவற்ற அன்னிய தேசத்தில் அகமதி தமிழ் திருச்சபையின் மூலம் எங்களை அரவணைத்த இதயத்தின் இறைவா வான் தொடும் தூரம் உன் புகழ் பரவட்டும்.

அகமதி தமிழ் திருச்சபையின் 48-ஆம் ஆண்டை துவக்கி வைத்து எங்களை ஆசீர்வதிக்க நீர் இன்றும் என்றும் இளமையாய் இனிதாய் புதிதாய் மலர்ந்திட எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்கள் சொல்லி மகிழும்,

கிறிஸ்துவுக்குள்,
R.ஸ்டீபன் குடும்பத்தார்.

## வாழ்த்து மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான அகமதி தமழ் சபை குடும்ப அங்கத்தினர் யாவருக்கம் சபை 47-ம் ஆண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இம்மட்டும் சபையை நடத்தி வந்த தேவன் இந்த புதிய ஆண்டிலும் வழி நடத்த ஜெபிக்கிறோம்.

இந்த ஆண்டு விழா நாளில் அகமதி தமிழ்ச் சபையை ஆரம்பித்த சபைக்காக உழைத்து பாடுபட்ட ஒவ்வொருவரையும் நினைத்து தேவனுக்கு நன்றி சொல்லுவோம்.

கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் கர்த்தருக்கு உண்மையுள்ள சாட்சியாக ஊழியம் செய்பவர்க்கு தேவனோ அழிவில்லாத கிரீடத்தை சூட்டுவார்.

1.ஆவியின் கனியாகிய இச்சையடக்கமுள்ளவர்க்கு அழிவில்லாத கிரீடம் சூட்டப்படும் (1-கொரி-9:25)

(a) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கும்
(b) உத்தமன் என்று தன்னை விளங்கப்பண்ணுகிறவர்க்கும் (யாக்-1:2)
(c) மரண பரியந்தம் உண்மையாயிருப்பவர்க்கும் ஜீவ கிரீடம் சூட்டப்படும் (வெளி-2:10)

2.தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்க்கு பரிசுத்த கிரீடம் சூட்டப்படும் (லேவி-8:9)
கர்த்தருக்கு ஆணையிட்டு பொருத்தனை பண்ணுகிறவர்களுக்கு பூக்கும் கிரீடம் சூட்டப்படும். (சங்கீ-132:18)

3.தேவ பிள்ளைகள் மாதிரியுள்ள ஜீவியம் செய்து இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாய் இருப்பவர்களுக்கு சந்தோஷமும், மகிழ்ச்சியின் கிரீடம் சூட்டப்படும். (1-தெச-2:19,20, பில-4:1)

4.தேவனுக்கென்ற பிரதிஷ்டை பண்ணிக்கொண்டவர்களுக்கு அபிஷேகத் தைலம் என்னும் கிரீடம் சூட்டப்படும். (லேவி-21:10,12)

(a) நல்ல போராட்டம் போராடி (b) ஓட்டத்தை முடித்து
(c) விசுவாசத்தைக் காத்துக்கொண்டவர்களுக்கும்
(d) இயேசுவின் பிரசன்னமாகுதலை விரும்புகிறவர்களுக்கும் நீதியின் கிரீடம் சூட்டப்படும். (2-தீமோ-4:7,8)

அகமதி தமழ்ச் சபை அங்கத்தினர் யாவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நல்வாழ்த்துக்கள்.

அன்புள்ள,
சகோ.G.அருள் சாமுவேல்

## அன்பின் வாழ்த்து

வளர்ச்சியின் ஏணியாய்
உயரங்களை கிழடக்கினாலும்
வழித்தடம் புனைந்து
நெடுதூரம் பயணித்தாலும்
வாழ்க்கையின் உச்சத்தில்
நெகிழ்ந்து சுகித்தாலும்
வான் மழை பொழிந்து
இன்புற்று மகிழந்தாலும்
வானவர் இயேசுவின்
பாதத்தில் விழுவதே வாழ்வின்
மேலான பாக்கியம்

இத்தனை மகிமையான பாக்கியமான தேவனுடைய இரட்சிப்பு எபே-2:8 பரிசுத்த ஆவியின் வல்லமை. அப்-2:38 ஆவியின் வரங்கள். 1-கொரி:12:1,16 எனும் ஆசீர்வாதங்களோடு (47 வது) சபை ஆண்டு விழாவை கொண்டாடும் மஷிகா மிராக்கிள் மினிஸ்ட்ரீஸ் ஊழியங்கள் சார்பாக எங்களுடைய வாழ்த்துக்கள்.

பொறுப்பாளர்கள் சபை மக்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் இனிய வாழ்த்துக்கள்.

கிறிஸ்துவின் பணியில்,
Pastor.ஆல்வின் ஜெபா

## கூடு தேடிய சிட்டு குருவி

சிட்டுக் குருவியின் கூடு
சிக்கித் தவிக்குது பாரு !
அடைமழை காலமோ இல்லை
ஆண்டவரின் விருப்பமோ !
கொட்டும் மழையினிலே என்
கூடும் கரைகின்றதே !
உடைந்த என் இருதயத்தை உம்
வார்த்தை தேற்றிடுமே !
வானம் நீர் என்றால் அதில்
விண்மீனாய் வாழ்ந்திடுவேன் !
மேகம் நீர் என்றால் நான்
மழை நீராய் வாழ்ந்திடுவேன் !
வாழ்க்கை நீர் என்றால் நான்
வலியோடும் வாழ்ந்திடுவேன் !
வழிகாட்ட நீர் உண்டு நான்
வாழ்ந்திடுவேன் உம் பெலத்தால் !
கூடு இல்லை என்ற எனக்கு உம்
செட்டையின் நிழலினிலே அடைக்கலம் தந்தீரே !
இன்னும் துதித்திடுவேன் என்
இயேசுவின் அன்பினையே...

இப்படிக்கு,
சகோதரி.வனிதா.

## கனி மரம்

**நீர் கனிச்செடி அல்ல...இனி கனி–மரமாய்...**

அகமதி தமிழ் திருச்சபையே அகம் மகிழ
அப்பா பிதாவே என்று அழைத்திட
அன்னையின் கரமாக அனைத்துக்கொண்டாய்
ஆர்ப்பரிக்க, ஆராதிக்க ஆனந்த சத்தத்தோடே
ஆண்டுகள் பல துதித்திட தந்தாய்
இன்று மட்டும் அல்ல இறுதிவரை இமானுவேலராய்
இன்னல்கள் களைந்து இன்பம் தந்திட்டாய்
ஈன்ற பொழுதினை விட இரத்தம் சிந்திய
ஈரம் கொண்ட நெஞ்சினிலே சுமந்தாய்
உயிர்ப்பித்தாய் உணர்வுடைய உறவாடினாய்
உண்மையாய் நோக்கி உம் பாதம் பணியசெய்தாய்
ஊக்கமும் ஊனும் ஊற்றாய்
ஊற்றுத் தண்ணீராய் ஜீவநதியாய்
எதுவும் என்னால் இயலாது என்ற பொழுது
எல்லாம் கூடும் என்று வார்த்தையினால்
ஏறிட்டு பார்த்த சிலுவைக் காட்சியினால்
ஏக்கங்கள் நிறைவேற்றி சிந்தை மாற்றினாய்
ஒப்கொடுத்தீர் மனிதரின் மேல் பிரியம் வைக்க
ஒன்றாக்கினாய் உலர்ந்த எலும்புகளையும்
உங்களையும்
ஓடி உழைத்திட ஊழியங்கள் பெருகிட
ஓடும் நதியோல ஓடிடா பக்தனாய்
ஔஷதமாய் அகமதியில் வளர்ந்திட்ட
தமிழ்த் திருச்சபையே
/யுதம் அகற்றி அன்பாய் கனிவரம் செயல்பட
நாற்பத்தி ஏழாம் ஆண்டினை ஆசீர்வதித்து, ஆத்மா
ஆதாய ஆண்டாய் ஆட்கொண்டு
அபிஷேகியும் அனைவரையும் இயேசுவின் வருகை
மட்டும், உம் சேவை தொடர காலங்கள் உமதாகிட,
கனிமரமாய் காய்த்திட
தொடருகிறோம் உம்மோடு மகிழ்ச்சியாய்...

அன்புடன்
சகோ.எபினேசர்.M

## தேவன் தந்த அழகிய பூமரம்

பூக்களற்ற பூமரமாய் வாடி வரும்
நாட்டவரின் வாழ்க்கை...
மனம் வீசும்படியாய் மீண்டும்...
அழகான பூக்களை பூக்கச்செய்து...
தளிர் மரமாய் மாற்றும் வண்ணம் அமைந்த...
தேவன் தந்த அழகிய...

அகமதி தமழ்த் திருச்சபைக்காக...
தேவனே உமக்கு ஸ்தோத்திரம்...

இப்படிக்கு,
சகோ. சந்தியா காட்டீஸ்

## நம்பிக்கையின் ஒளிவிளக்கு

பரபரப்பான வாழ்க்கையின்
சலசலப்புகளுக்கு மத்தியில்,
தனித்து நிற்கும் ஒரு இடம்

இதயங்களும் ஆன்மாக்களும்
அமைதியையும் மகிழ்ச்சியையும்
காணும் இடம்

அன்பும் மகிழ்ச்சியும் எப்போதும்
அருகில் இருக்கும் இடம்

நாற்பத்தேழு ஆண்டுகள்
கடந்து விட்டன, ஓ மிக வேகமாக

இந்த புனிதமான இடம் முதலில்
ஆசீர்வதிக்கப்பட்டு வார்க்கப்பட்டதால்

சோதனைகள் மற்றும் இன்னல்கள்
மூலம் அது உயர்ந்து நிற்கிறது

நம் அனைவருக்கும் வழி காட்டும் ஒரு
ஒளிதரும் ஒளி.
இந்த தேவாலயத்தில், நாங்கள்
ஆறுதலையும் கருணையையும் கண்டோம்,

நம் மகிழ்ச்சிகளைப் பகிர்ந்து
கற்றுக்கொண்டோம்
நம் வாழ்க்கை எளிதாக்கவும்
கற்றுக்கொண்டோம்

நாங்கள் சிரித்தோம், அழுதோம்,
நாங்கள் வளர்ந்தோம்.

அன்புள்ள தேவாலயமே, உங்கள்
சிறப்பு நாளில் இதோ,

அது எல்லா வகையிலும் அன்பாலும்
ஒவ்வொரு மகிழ்ச்சியாலும்
நிரப்பப்படட்டும்
உங்கள் சுவர்கள் தொடர்ந்து
வலுவாகவும் உண்மையாகவும் இருக்கட்டும்

நம்பிக்கையின் ஒளிவிளக்கு
எனக்கும் உங்களுக்கும் ஒரு இடம்

47–வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்,
என்னுடைய அன்பான தேவாலயமே,

உங்கள் எதிர்காலம் பிரகாசமாக
இருக்கட்டும், உங்கள் இதயமும்
ஆன்மாவும் தெய்வீகமாக
இருக்கட்டும்

அன்புடன்
தாஸ் குடும்பம்



**Ahmadi Tamil Church**
**47th Anniversary**

**A** - And from His fullness we have all received, grace upon grace. John 1: 16
**H** - He healeth the broken in heart, and bindeth up their wounds.Ps 147: 3
**M** - Make a joyful noise unto the Lord, all ye lands. Ps 100: 1
**A** - Above all, love each other deeply, because love covers over a multitude of sins. 1Peter 4: 8
**D** - Deal with thy servant according unto thy mercy, and teach me thy statutes. Ps 119: 124
**I** - I will abide in thy tabernacle forever: I will trust in the covert of thy wings. Ps 61: 4


**T** - To an inheritance incorruptible, and undefiled, and that fadeth not away, reserved in heaven for you. 1 Peter 1: 4
**A** - Ask, and it will be given to you; seek and you will find; knock, and it will be opened to you. Mat 7: 7
**M** - May He grant you your heart's desire and fulfill all your plans. Ps 20: 4
**I** - If we suffer, we shall also reign with Him. If we deny Him, He will also deny us. 2 Tim 2: 12
**L** - Let not your hearts be troubled; believe in God, believe also in me. John 14: 1

**C** - Casting all your cares upon Him, for He careth for you. 1 Peter 5: 7
**H** - Heal the sick, cleanse the lepers, raise the dead, cast out devils: freely ye have received, freely give. Mat 10: 8
**U** - Unless the LORD had been my help, my soul had almost dwelt in silence. Ps 94: 17
**R** - Restore unto me the joy of Thy salvation; and uphold me with Thy free spirit. Ps 51: 12
**C** - Cast your cares on the LORD and He will sustain you; He will never let the righteous fall. Ps 55: 22
**H** - He sent His word, and healed them, and delivered them from their destructions. Ps 107: 20

**Stefana**

**S. G. STEFANA**


**Solomon Immanual**








**Kavin**




**Delsiha Godlin**





**Deril Godson**


**Delsiha Godlin**





**Karin**





**Dan Jacob**




Mithran




Bryan




Anderson Samuel



Aadith.s



Rheul Ashking



Keziah



Riya



Debbie



Dhiya

## Happy 47th birthday

Happy 47th birthday, oh how time flies
Through the years, you've seen life's
highs and lows
But today, let us celebrate with joyful cries
For another year of growth and love
that only grows
Forty-seven years of lessons learned
Each wrinkle etched with stories untold
From every twist and turn, wisdom earned
In this journey, you've found
treasures of gold

you've weathered storms, faced
challenges bold
yet you've emerged strong, resilient.,
and true
with every hurdle, your spirit never sold
your determination, a guiding light
that shines through
On this special day, let laughter fill the air
As we gather to honor the person
you've become
For your kind heart, compassion,
and love so rare
May your days be filled with blessings,
one by one
May your future soar high,
reaching for the sky
As you embrace the possibilities
that lie ahead
Forty-seven years, a tapestry woven,
oh so fine
A life well-lived, as you've gracefully tread
Happy 47th birthday, dear church of mine
May this day and the ones that
follow be bright
with love, joy, and adventures intertwined
May your spirit soar, forever taking flight.

Happy birthday Ahamadi tamil

congregation!
By
Andrea Megdalene Dhas

## மோட்ச லோகம்

சாதி, சமயம் என்றில்லை!
எல்லோரும் சமமே!
ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வில்லை!
யாவருக்கும் கிடைப்பது ஆசீர்வாதமே!

உயர்வு, தாழ்வு என்பதில்லையே!
நீதி, நேர்மை சரி சமமே!
சத்துரு (சாத்தான்) பகைவர்
போன்றவர்களில்லை!
ஒருமணமும், சமாதானமுமே!

துரோகி,அவிசுவாசி என்ற
பாகுபாடு அங்கில்லை!
பட்சபாதமில்லாத இடமே!
பேதை,ஞானி –வேற்றுமையில்லை!
சிறந்த மேலான அறிவுடையோரே!

துன்பமோ, வியாதியோ அங்கில்லை!
அதிசமும், ஆச்சரியமும், அற்புதமுமே!
பாவங்களும்,பாவிகளும்
அங்கு இருப்பதில்லை!
இரட்சிக்கப்பட்ட நீதிமான்களின்
இருப்பிடமே!

பசி, பட்டினி என்பதுவும்
அங்கிருப்பதில்லையே!
செல்வமும், ஐசுவரியமுமே!
சண்டை,சச்சரவுகளுக்கு
இடமேயில்லையே!
யாவற்றிற்கும் விட்டுக்கொடுப்பவர்கள்
மட்டுமெ!

பதவி, பட்டம், பேர், புகழ்
என்பதுமில்லையே!
இவை யாவும் அழிந்து போகும்
செல்வங்களே!
செல்லும் பாதை –இடுக்கமான
ஒரே வாசல் தானே!
ஆனால் நிரந்தரமான சமாதானம்,
சந்தோஷமே!

குறை என்று ஏதுவும்
அங்கில்லை!
அளவில்லா மகிழ்ச்சி!
பேரானந்தமே!
பரமனைப் போல வாழ்ந்திடு!
பரலோகம் நீ சென்றிடு!

இப்படிக்கு,
சபை விசுவாசி

## STRONGER YOU ARE, VICTORIOUS YOU WILL BE

கிறிஸ்தவுக்குள் பிரியமான அஹமதி தமிழ் திருச்சபை சககோதர சககோதரிகளகே இந்த 47 வது ஆண்டு விழாவின் துவக்கத்தில் உங்கள் அனைவரையும் நம்முடைய கர்த்தராகிய இயசேு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

Dear Brothers and Sisters in Christ, with immense pleasure we greet you, the "Ahmadi Tamil Congregation" in the name of our Lord and Saviour Jesus Christ, on this wonderful day of the 47th Anniversary Celebration. God bless you!

"நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு (சுகத்திலும், சமாதானத்திலும், சந்தோஷத்திலும், பாதுகாப்பிலும், சகல ஆவிக்குரிய, பூமிக்குரிய ஆசீர்வாதங்களிலேயும்) அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய **கர்த்தர்** உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக". (உபாகமம் 1:11) ஆமென்!

"உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ" (நியா 6:14) என்று கர்த்தர் அன்று கிதியோனிடம் சொன்னார். இன்றைக்கு உன்னையும் பார்த்து கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உனக்கு இருக்கிற பலத்தோடே இந்த 47 வது ஆண்டிற்குள் போ, நான் சகலத்தையும் உனக்கு ஜெயமாக முடியப்பண்ணுவேன் என்பதே.

அப்படியானால் உனக்கு இருக்கிற பலம் தான் என்ன?. கிதியோனுக்கு எது பலமாயிருந்ததோ அதுவே உனக்கும் பலமாயிருக்குமானால் கிதியோனின் காரியம் ஜெயமாய் இருந்தது போலவே, நீ கையிட்டு செய்யும் அனைத்து வேலையிலும், ஊழியத்திலும் உன் காரியம் ஜெயமாகவே இருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

### 1. உன் முதல் பலம் :

கர்த்தர் உன்னோடு இருப்பதே உன் முதல் பலம் (நியா 6:12,16 ; 6:34).

(God with you is your first and foremost strength).

(I) கர்த்தர் உன்னோடு இருப்பதால், நீயே பலசாலி / பராக்கிரமசாலி (யாரை விட? உன் சத்துருக்கள் எவரையும் விட. அல்லேலூயா!).

You are stronger than any of your enemies).

உன் சத்துருக்கள் மனிதர்கள் அல்ல. மாறாக, பிசாசும், அவன் தூதர்களுமே. தன் தந்திரங்களை செயல்படுத்த பிசாசு சில மனிதர்களை பயன்படுத்துகிறான் அவ்வளவே.

(II) மேலும், உன் சத்துருக்கள் அனைவருடைய பலத்தை சேர்த்தாலும், அது ஒரு மனிதனுடைய பலத்திற்கே சமம். (ஒரு மனிதனை துரத்துவதுபோல் துரத்துவாய், நியா 6:16).

(Strength of all your enemies put together = Strength of one man) அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் (2 இராஜா 6:16). எனவே நீயே பலசாலி. அல்லேலூயா!

(Iii) அதோடுகூட, கர்த்தருடைய ஆவியானவர் உன்மேல் இருப்பதே உன் பலம் (நியா 6:34). பலமும், அன்பும், தெளிந்த புத்தியையும் தருகிற ஆவியானவர், (2 தீமோ 1:7), ... பலத்தினாலும், பராக்கிரமத்தினாலும் முடியாததை செய்கிற ஆவியானவர், உன்மேல் இருப்பதே உன் பலம்., (சகரி 4:6) எனவே நீயே பலசாலி. ஆமென்!.

### . உன் இரண்டாவது பலம் :

கர்த்தருக்கு நீ முழுவதுமாய் கீழ்ப்படிவதே உன் இரண்டாவது பலம், (நியா 6:25-27).

Being obedient to God in everything is your second strength).

(I) அசுத்தமானதை தகர்த்தெறி, (நியா 6:25). தீமையை வெறுத்து, அதை விட்டு விலகு, (நீதி 8:13, 3:7)

(Ii) கர்த்தருக்கு துதிபலியிடு, (நியா 6:26; 2 நாளா 20:21-23)

(Iii) கர்த்தர் உனக்கு கொடுத்திருக்கிற **பலத்தை** (ஆயுதத்தை) வைத்தே உன் சத்துருவோடு யுத்தம் செய், (நியா 7:7). ... ஏனெனில் உலகத்தில் இருக்கிறவனிலும் **உங்களில்** இருக்கிறவர் **பெரியவர்**, (1 யோ 4:4). மேலும், நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, **தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும்** தரித்துக்கொள்ளுங்கள், (எபேசி 6:11).

### 3. உன் மூன்றாவது பலம் :

கர்த்தர் தயவு உனக்கு இருக்கிறதென்பது உன் மூன்றாவது பலம், (நியா 6:17).

(God's favour for you is your third strength).

(I) உன்னைக்குறித்த பயம் சத்துருவை பிடித்துக்கொள்ளும், (நியா 7:12-14)

(Ii) உனக்காய் கர்த்தரே யுத்தம் செய்வார், (நியா 7:22).

**4. உன் நான்காவது பலம் :**

உன் யுத்தத்தின் முடிவை யுத்தம் தொடங்குவதற்கு முன்பே கர்த்தர் முடிவு செய்துவிட்டார். (நியா 6:14) இதுவே உன் நான்காவது பலம். நீ தான் ஜெயிக்கப்போகிறாய் என்பதே அந்த முடிவு.

(Foreknowledge of your victory in the battle is your fourth strength)

யாரைக்கொண்டு வெறும் 300 பேரைக்கொண்டு. கொஞ்சத்தைக்கொண்டு அநேக நாள் போஷிக்கவும் (1 இராஜா 17: 12-16) கொஞ்சத்தைக்கொண்டு அநேகரை போஷிக்கவும் (லூக் 9: 13-17) கழுதையின் ஒரே ஒரு தாடை எலும்பைக்கொண்டு 1000 பேரைக் கொல்லவும் (நியா 15:15) ஒரே ஒரு தூதனைக்கொண்டு 185000 பேரைக் கொல்லவும் (2 இராஜா 19: 35) கர்த்தரால் ஆகும். எனவே ஜெயம் உன்னுடையதேஅல்லவோ!

எனக்கன்பான சகோதரனே சகோதரியே நீ எந்த ஒரு காரியத்தை செய்யும்போதும், Dear brothers & sisters, in all your endeavours,

கர்த்தர் உன்னோடு இருக்கிறார் என்பதை உறுதி செய்துக்கொள்

(Ensure God is with you),

கர்த்தர் சொல்வதை செய்வதில் கவனமாயிரு

(Ensure you are obedient to God in everything),

உனக்கு கர்த்தரின் தயவு நிச்சயம்

(God shall ensure you His favour)

உனக்கு ஜெயமும் சத்தியம்

(God shall ensure you Victory as well)

ஜெயம் கிடைத்தவுடன் கர்த்தருக்கு மகிமை ( உனக்கோ மற்றவர்க்கோ அல்ல) செலுத்த மறந்து விடாதே, (நியா 8:23; 2 நாளா 20:26)

(Don't be negligent to give glory to God whenever you are victorious).

ஜெய கிறிஸ்து உ ன் முன் செல்கிறார் ஜெயமாகவே உன்னை நடத்திடுவார்.

தேவன்தாமே அஹமதி தமிழ் திருச்சபையின் விசுவாச மக்கள் உங்கள் ஒவ்வொருவரையும் இந்த மகிழ்ச்சியான நாற்பத்தியேழாவது (47th anniversary ) ஆண்டிலேயும் இதைத்தொடர்ந்து வரவிருக்கும் ஆண்டுகளிலேயும், உங்களை ஜெயமாக (ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய பாதையிலும்) நடத்தி உங்கள் மூலம் கர்த்தர் மகிமைப்படுவாராக ஆமென்!

கிறிஸ்துவுக்குள் உங்களை வாழ்த்தும்
சகோ.பிரமேகுமார் குடும்பத்தினர்
வேலூர், இந்தியா

## வாழ்க்கை

**விமானத்தில் நாம் சென்று கொண்டு இருக்கும் போது, இந்த பயணம் எனக்கு பிடிக்கவில்லை என்று சொல்லி, நாம் இறங்க முடியாது, அதே போலதான் உன் வாழ்கையில்**

**உனக்கு பிடிக்காத சில விஷயங்கள் நடக்கலாம், அதற்காக நீ சோர்ந்து போகாதே, இயேசுவின் சித்தம் இல்லாமல் உன் வாழ்கையில் எதுவும் நடக்காது, கவலைப்படாதே.**

**விதி பெரியது,**
**அதன் முன் மதி சிறியது,**
**மதி கொண்டு விதிமாற்ற எண்ணாதே,**
**விதி தரும் துயரம் கண்டு துவளாதே,**
**மதிந்த இயேசுவின் முன் மண்டியிடு,**
**விதி மாற்றித்தருவார் நீ விழித்தெழு,**

**கர்த்தர் உன்னைக்**
**காக்கிறவர், கர்த்தர்**
**உன் வலது பக்கத்திலே**
**உனக்கு நிழலாயிருக்கிறார்,**
**சங்கீதம்-121.5**

**உன் கண்ணீர் வீணாக போகாது,**
**உன் நிலை தேவனுக்குத், தெரியும்,**
**கலங்காதே கர்த்தரை மாத்திரம் நம்பு**
**பதில் சீக்கிரமாய் உன்னைத் தேடி வரும்.**

**இப்படிக்கு,**
**சபையின் விசுவாசி**

## மூலைக்கல் –அஹமதி தமிழ் திருச்சபை

இயேசுவே திருச்சபை ஆலயத்தின்
என்றும் நிலைக்கும் மூலைக்கல்!!
ஆம் என் அன்பு அஹமதி தமிழ் திருச்சபையே
உன்னை வாழ்த்த வயதில்லை.....
கடந்த 10 ஆண்டுகளாக இந்த சபையில்
யாம் பெற்ற எண்ணற்ற ஆசிகள்
ஏராளம்! ஏராளம்!!
எத்தனை நிந்தைகள், அவமானங்கள்
கேலிப்பேச்சகள் நாங்கள் கேட்டபோதும்
உன் சந்நிதியில் (அஹமதி திருச்சபையில்)
நான் அழுதபோதெல்லாம் எனக்கு
ஆறுதல் தந்து திடப்படுத்தி கடந்த இரண்டு
ஆண்டுகளில் உம்முடைய ஊழியத்தை
வெற்றியாய் செய்து முடிக்கும்படி
செய்த அஹமதி சபையே உம்மை
வாழ்த்துகிறோம்.
எங்களைப் போன்ற
ஏழைப்பிள்ளைகள் ஒதுக்கிய இந்த
சமுதாயத்தில், இந்த சபையில் எங்களை
மூலைக்கல்லாய் வைத்து, அநேகரை
ஊழியத்தின் பாதையில் நடத்துகின்ற உம்
அன்பிற்காய் என்றும் இத்திருச்சபையின்
ஆண்டவரின் அடிமை நான்....
நீ பல ஆண்டு விழாக்களைம் கண்டு
களிக்கூற வாழ்த்துகிறோம்
எம் அஹமதி தமிழ்த் திருச்சபையே....
அல்லேலூயா....
47-வது ஆண்டு விழா நல்வாழ்த்துகள்
அஹமதி திருச்சபையே
நீ என்றும் வாழ்க....

**கர்த்தரின் பிரியமான**
**எப்சிபா ஸ்டீபன் மற்றும்**
**குடும்பத்தினர்.**

## கேம்ப சகோதரர்களின் வாழ்த்து

கிறிஸ்துவுக்குள் அன்பான
தமிழ் திருச்சபையார் அனைவருக்கும்
ஆண்டவராகிய இயேசு கிறித்துவின் நாமத்தில்
47 வது ஆண்டின் வாழ்த்துக்களை
மீனா அப்துல்லா கேம்ப சகோதரர்கள்
சார்பில் கூறி கொள்வதில் பெருமகிழ்ச்சி
அடைகிறோம்

**மீனா அப்துல்லா**
**கேம்ப் சகோதரர்கள்**

## Their love for God

Ahamadi Tamil congregation, a community of faith,
Celebrates 47 years of devotion and grace.

From humble beginnings to a vibrant youth,
Their love for God and each other,
a wondrous truch.

with prayers and hymns, they gather each week,
their voices rising, ajoyful seek.

Their hearts filled with hope,
their spirits soar,
In the presence of the divine, they adore.

Through trials and tribulations,
they stand strong,
Their bond unbreakable, their
love never wrong.

with each passing year, their
faith grows deep,

Their love for God, a shining
beacon to keep.

Their service to others, a testament
to their ceed,
selfless acts of kindness, a deed to be seeded.

In the community, they strive to make a change,
A better world for all, their hearts
and souls to arrange.

so let us celebrate, this milestone grand,
Forty-seven years of faith, a wondrous band.

ahamadi Tamil congregation, a family true,
Their love for God, a shining light a new.

By
Adriel kemuel Dhas.



# Voice of Praise Ministries

தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய பாஸ்டர். ஜெபசுந்தர் 47-வது ஆண்டு விழாவை ஆசரிக்கும் அஹமதி தமிழ் திருச்சபையின் ஊழியர்கள் விசுவாசிகள் யாவருக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது.

கடந்த ஆண்டு இந்நேரம் உங்களோடு இருந்தது என் நினைவுக்கு வருகிறது. மறக்க முடியாத ஆண்டு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கிறார்" என்ற வார்த்தையின் படி தேவன் உங்களுக்குள்ளே இருந்து காரியங்களை வாய்க்கப்பன்னி, கீர்த்தி தேசம் எங்கும் பரவி, விருத்தி உண்டாக தேவன் செய்திருப்பார் என்று விசுவாசிக்கிறேன்.

இந்த 47-வது ஆண்டு நிறைவில் தேவன் கொடுத்திருக்கும் ". . . உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன்" என்ற வார்த்தைக்காய் தேவனைத் துதிக்கிறேன். ஏனென்றால் சபை வளர்ச்சிக்கும் மந்தையின் பெருக்கத்திற்கும் விசுவாசிகளின் உயர்வுக்கும் ஆவியானவருடைய ஒத்தாசை தேவை. இந்த புதிய ஆண்டில் ஆவியானவர் சபைக்குள் விசுவாசிகளுக்குள் இருக்கும் போது நடக்கும் காரியங்கள் என்ன என்பதை தியானிப்போம்.

**1.விடுதலை தந்து நடத்துவார்**

கர்த்தரே ஆவியானவர் கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுண்டு. (II கொரி. 3:17)

**2.போதித்து நடத்துவார்**

என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் நினைப்பூட்டுவார். (யோ. 14:26)

**3.கண்டித்து உணர்த்தி நடத்துவார்**

அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்துவார்.(யோ. 16:8)

**4.ஜெபிக்க உதவி செய்து நடத்துவார்**

அந்தபடியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். (ரோமர் 7:26)

ஆகவே கடந்த கால சாதனைகளில் களிகூர்ந்து இருக்கிற வண்ணமாகவே இருப்போம் என்று கூர்மழுங்கிய ஆயுதமாக, தேங்கி விட்ட குட்டையாக இராமல் காலத்தின் வேகத்தை அறிந்து இயேசுவின் வருகைக்கு சபை ஆயத்தப்பட பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளாமல் சேவகமெழுதிக் கொண்ட எஜமானனைப் பிரியப்படுத்த நல்ல போர்சேவகராய் தீங்கனுபவித்து தியாகத்தோடு செயல்பட விரைந்தெழுவோமாக!

இம்மட்டும் நடத்திய எபிநேசரே, இன்னமும் வழிநடத்தும் இம்மானுவேலராயிருப்பதற்க்காக நன்றி என்று கூறி "நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே . . . உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்ற பாராட்டுரையை மட்டுமே எதிர்பார்த்து தீவிரமாக செயல்பட நம்மை சபையாய் அர்பணித்து இப்புதிய ஆண்டை தொடருவோமாக! தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

கிருஸ்துவின் பணியில்

உங்கள் அன்பு ஊழியன்

ஜெபசுந்தர்

## நீரே என் சொந்தம்

என் இதயத்தில் நீங்கா இடம் பிடித்த என் அன்பு அஹமதி தமிழ் திருச்சபையே உன் பிறந்த நாட்களை நினைவு கூறும் போதெல்லாம் உன்னை உருவாக்கிய எங்கள் முற்பிதாக்களை நினைக்கிறேன். ஏனென்றால் இப்படிப்பட்ட ஒரு நல்ல சபையை எங்களுக்கு தந்த அவர்களுக்கு நன்றி சொல்கிறேன், அவர்களை என் ஜெபத்தில் நினைக்கிறேன்.

என் உள்ளம் கொழுந்து விட்டு எரிகின்ற நல்லவைகளை நினைவு படுத்துகிறேன். நீர் நல்லவைகளைத் தந்து நல்லொழுக்கம் பேணி நல் உறவு மதித்து நல்ல உறவுகளைத் தந்து சுவிசேஷ நற்செய்தி பரைசாற்றி இல்லாருக்கு உதவி செய்து நல்லோர் பலர் உன்னைப் போற்றி துதிக்க எங்கள் இல்லத்தில் இன்பமும் உள்ளத்தில் மகிழ்வும், செழிப்பும் என்றும் தந்து எங்கள் குறைவை நிறைவாக்கிய நீர்

47 ஆண்டுகள் செய்த சாதனையைப் போல் இன்னும் பல ஆண்டுகள் சிறப்புடன் வாழ்ந்து வாழ்வின் துக்கத்தை

சந்தோஷமாக மாற்ற நீர் என்றும் பல்லாண்டு வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தும்.

இப்படிக்கு,
சபையின் விசுவாசி

## திருச்சபையே உன்னை வாழ்த்துகிறேன்

அன்பு திருச்சபையே
ஆணவ பெருந்தகையே

இன்னிசை இளவளே
ஈகையின் தாயுமானவனே

உன்னதமானவனே
ஊக்கத்தின் திருமருந்தே

எங்களை வாழ வைத்த
ஏற்றமுறு என் உயிரே

ஐயம் உற்ற வேளையில்

ஒளி விளக்காய் வெளிச்சம் தந்து
ஓடிவந்து அறவனைக்கும்

திருச்சபை உறவுகளுக்கு

என் குடும்பத்தின் சார்பாக
வாழ்த்துக்கள்!!!!

இப்படிக்கு,
சபையின் விசுவாசி

## அரூபியே! சொரூபியே!
## எங்கள் அஹமதி திருச்சபையே நீ

அண்டினோர்கெல்லாம் அன்னையாய் அரவணைக்கும் தந்தையாய் இறைமை போதிக்கும் ஆசானாய் எங்கள் இன்னல் தீர்க்கும் இறைவனாய் இந்த (குவைத்) மண்ணில் உருவெடுத்து மாந்தரின் மனதில் குடிபுகுந்தாய். நாற்திசையெங்கும் மங்கா ஒளிவீசி அகவை நாற்பத்தி மூன்றில் அடியெடுத்தாய்.

கலங்கிய விழியோடே வந்தாலும் கஷ்டம் உனக்கில்லை என உரைத்தாய்! கண்ணீர் துடைத்திடும் பல உள்ளம் கண்ணெதிரே நீ தந்தாய்! கெட்ட குமாரனாய் வந்தாலும் கட்டி அணைத்து அரவணைத்தாய்! கட்டுகள் அனைத்தும் அவிழ்த்துவிட்டு கரத்தினில் ஏந்தி தாங்குகின்றாய்!

எத்தனை எத்தர்கள் என்னிலுண்டு எனினும் கவலை கொள்ளாது! எத்தனை இடர்கள் வந்தாலும் என்னை மீட்டிட நீயுண்டு! வறுமை என வரும்போதும் நான் வருத்தங்கள் பல படும்போது கர்த்தரின் வல்லமை உந்தன் துணை கொண்டு வருத்தாய் வழிகள் எனக்கென்று! சங்கம் வளர்த்த தாய்மொழியில் சாலவும் எம்மை தொழவைத்தாய்! சான்றோர் பலர் உருவாக்க நீ சாதனை நாளும் படைத்திட்டாய்!

எத்தனை (விலையுயர்ந்த) கற்கள் உன்னிலுன்டு என்னிடவோ என்னம் எனில் இல்லை. அத்தனையும் சொக்க இரத்தினமாம் அவை கொண்டு அமைந்த திருச்சபைக்கு வாழ்த்து சொல்ல வயதில்லை வாழ்த்தாமல் இருக்க மனமில்லை. வாழ்க நீயும் பல்லாண்டு என வாழ்த்துகிறோம் உம் குணம்கொண்டு.

கிறிஸ்துவக்குள் அன்புடன்

ஜான்ஸன் குடும்பத்தார்

VICTORY WORSHIP CENTRE
(Regd No.: 50/2015)
Rev. L. Jebaraj
Pastor
Date: ............................

கிறிஸ்துவுக்குள் அன்பான,

அகமதி தமிழ் திருச்சபை மக்களுக்கு
மதுரை விக்டரி ஆராதனை மையத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

47 ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்கும் தங்கள் திருச்சபை மக்கள் ஒவ்வொருவரையும் கிறிஸ்துவுக்குள் சகல ஆவிக்குரிய ஆத்துமாவுக்குரிய சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களினாலும் கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக.

இதுவரை உதவி செய்து நடத்தி வந்த எபிநேசர்
இனிமேலும் அதிசயமாய் நடத்துவாராக!

அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார் (சகரி-6:13) என்றவாக்கின்படி தங்கள் திருச்சபையையும், குடும்பங்களையும், தனிப்பட்ட வாழ்வையும் கர்த்தரே கட்டி எழுப்பி இன்னும் அநேகருக்கு ஆசீர்வாதத்தின் ஊற்றுகளாக விளங்கச்செய்ய வாழ்த்தி ஜெபிக்கிறேன்.

கர்த்தரின் கிருபை உங்களோடிருப்பதாக!

ஜெபத்துடனும், வாழ்த்துக்களுடனும்
(L.ஜெபராஜ்)



0452 - 4951487 PLOT NO. 4670, OPP. TO JEYAVILAS, JAIHINDPURAM MAIN ROAD, MADURAI-11



Bro.Stalin
President

Bro.Sivakumar
Treasurer

Bro.Sukumaran
Secretary

Bro.Subin Singh
Youth Leader

Sis.Celin David
Womens Leader

Sis. Anitharaj
Sunday School

Sis.Beulah Mercy Paul
Prayer Ministry

Bro.Franklin
Orphanage Ministry

Bro.Christoper
Missionary Ministry

Bro.Prasad
Camp Ministry

Bro.Jeganathan
Church Construction

Bro.Alvin Muthiah
Choir Ministry

Bro.Kirankumar
Transport Ministry

Bro.Antony
Magazine Ministry

Bro.Arockiaraj
Web Ministry



# Commitee Members
# Ministry Coordinators


அஹமதி தமிழ் திருச்சபை
47வது ஆண்டு விழா
2023